பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 24 திங்கட்கிழமை 12.12.2022 கதிர் 288

## பால் மாவுக்கு மக்கள் வரிசை

நாட்டில் மீண்டும் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், பால் மாவை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். பால் மா கடைகளுக்கு முன்பாக இன்று நீண்ட வரிசை காணப்பட்டது.

# யாழ். சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் மீண்டும் இன்று ஆரம்பம்

### 33 மாதங்களுக்குப் பின்னர் தரையிறங்கியது சென்னை விமானம்







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தின் சேவைகள் மீண்டும் இன்று ஆரம்பமாகின. இந்த விமான நிலையத்துக்கு 33 மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் இன்று சென்னை விமானம் தரையிறங்கியது. 2

## ரணில் அரசை ஆட்டம் காண வைக்க இன்னும் 10 எம்.பிக்களே வேண்டும்!

### ரஞ்சித் மத்தும பண்டார சூளுரை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முதலாவது அரசியல் அஸ்திரம் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஏவப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சூளுரைத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு கொழும்பு, பௌரை – கெம்பல் 2

## ஐக்கிய மக்கள் சக்தியை அழிக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்

### கட்சியின் மாநாட்டில் சஜித் சபதம்



நான் உயிருடன் இருக்கும் வரை, ஐக்கிய மக்கள் சக்தியை அழிக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான 2

## ரணில் – பஸில் முக்கிய பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை, அரசமைப்பு மற்றும் பல 2

## கிழக்கு மாகாண இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு பூட்டு

கிழக்கு மாகாணத்தில் இன்று (12) முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கு மாகாண உள்ளூராட்சித் திணைக் களம் தீர்மானித்துள்ளது.

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் மாடுகள், ஆடுகள் உயிரிழந்து வருவதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கால்நடைகளை ஏற்றிச் செல்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதி 2

## இனிமேல் வீழ்ந்தாலும் விதையாக வீழ்வோம்

### விருட்சமாய் மீண்டெழுவோம் என்று ஜீவன் எம்.பி. முழக்கம்



தோல்வியே சிறந்த ஆசான். அதிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, முன்னேறுவதற்கான வழிகளை நாம் அடையாளம் காண வேண்டும். எனவே, தோல்விகளைக் கண்டு துவண்டுவிட வேண்டாம். அடிபட்டதும், அடிபணிந்து வாழ்ந்ததும் போதும். இனி வீழ்ந்தாலும் விதையாக வீழ்வோம் – விருட்சமாய் 8

## இராஜாங்க அமைச்சருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை

### சட்டமா அதிபருக்குக் கால அவகாசம்



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்ய எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி வரை சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் 2

## வடக்கு உட்பட 4 மாகாணங்களுக்கு விரைவில் புதிய ஆளுநர்கள்

வடக்கு உட்பட நான்கு மாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்களை விரைவில் நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார் என்று அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியமிக்கப்படவுள்ள நான்கு ஆளுநர்களில் முன்னாள் அமைச்சர்களும் அடங்குகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

9 மாகாணங்களில் ஏனைய 5 மாகாண ஆளுநர் பதவிகளில் எந்த மாற்றங்களையும் செய்வதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய நான்கு மாகாணங்களுக்கு நியமிக்கப்படவுள்ள புதிய ஆளுநர்களின் பெயர் விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

## ஐக்கிய மக்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் விரைவில் வருகின்றது. நாட்டை மீட்கக்கூடிய ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கி, எமது வெற்றி பயணத்தை மக்கள் ஆரம்பித்து வைக்க வேண்டும் - என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மாநாடு கொழும்பு, பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு அறைகூவல் விடுத்தார். அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிக்கொள்வதற்கான போராட்டம் தொடரும் என்றும் அவர் கூறினார்.

## ரணில் அரசை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

எமது அணியில் சிறந்த தலைவர் இருக்கின்றார். இணைந்து பணியாற்றக்கூடிய உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, எமது பயணம் தொடரும். நாட்டு மக்கள் எமது பக்கமே நிற்கின்றனர். அடுத்து நடைபெறும் தேர்தலில் இது தெரியவரும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கான அறைகூவலை தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். அதற்கான காலம் வந்துவிட்டது.

இந்த ஆட்சி நிச்சயம் கவிழ்க்கப்படும். ஆரம்பத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவாக 134 வாக்குகள் நாடாளுமன்றத்தில் இருந்தது. அது தற்போது 123 ஆக குறைவடைந்துள்ளது. இன்னும் 10 வாக்குகளைக் குறைத்தால் ஆட்டம் காண வேண்டிவரும். எதிரணிகளுடன் இணைந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இதற்கான அடித்தளம் இடப்படும் - என்றார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை ஒடுக்குவதற்கு மாளிகை மட்ட சூழ்ச்சி நடக்கின்றது. திட்டமிட்ட அடிப்படையில் சேறுபூசப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் சஜித் பிரேமதாஸ உயிருடன் இருக்கும் வரை, ஐக்கிய மக்கள் சக்தி மீது கைவைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்.

அவர்களும் ஒன்றுதான், இவர்களும் ஒன்றுதான் என 'மொட்டு'க்கூட்டணியுடன் எம்மை ஒப்பிட்டு சிலர் பேசுகின்றனர். அவ்வாறு பேசுபவர்களும் ஒன்றுதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது மாறுபட்ட சக்தியாகும். புத்தாக்க சிந்தனை கொண்ட கட்சியாகும். நாட்டை மீட்கக் கூடிய ஆளுமை எம் வசமே உள்ளது.

மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. நாட்டுக்காகப் போராடியவர்கள் சிறைகளில் உள்ளனர். அவர்களுக்காக நாம் முன்னிலையாவோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி போராடுவோம். அதற்குப் பதிலாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உரிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட, படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க பற்றி எவரும் கதைப்பதில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு நிச்சயம் நீதியைப் பெற்றுக் கொடுப்போம். கொள்ளை அடிக்கப்பட்ட பணம் எமது நாட்டுக்கு மீளக் கொண்டு வரப்படும்.

விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. நாட்டு மக்கள் ஒன்றுசேர வேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்க, எமது வெற்றி அலையை ஆரம்பித்து வைக்க வேண்டும் - என்றார்.

## யாழ். சர்வதேச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2019ஆம் ஆண்டு திறக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாட்டில் கொரோனா வைரஸ் உச்சம் பெற்ற போது இழுத்து மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில், நீண்ட இழுபறியின் பின்பு இன்று சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

சென்னையில் இருந்து வருகை தந்த முதலாவது விமானம் முற்பகல் 11.35 இற்குத் தரையிறங்கியது.

இந்த விமானத்தில் 14 பயணிகளும், 14 விருந்தினர்களும் என 28 பேர் வருகை தந்தனர்.

இவர்களைச் சுற்றுலா இராஜாங்க அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராஜேஸ்நட்ராஜ் ஆகியோர் வரவேற்றனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

சென்னையிலிருந்து அலையன்ஸ் எயார்லைன்ஸ் என்ற விமான சேவை நிறுவனமே பலாலிக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த விமான சேவை நிறுவனத்தால் வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன், சனி ஆகிய நான்கு தினங்களுக்குச் சேவைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து முற்பகல் 10.50 யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானம் பிற்பகல் 1.30 இற்கு மீண்டும் புறப்படவுள்ளது. பயணி ஒருவர் 20 கிலோ வரையான பொருட்களை விமானத்தில் எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டிருந்தார். பின்னர் கால்நடை மருத்துவர்கள் சங்கம் நேற்று செய்தியாளர் சந்திப்பை நடத்தி, இறந்த விலங்குகளை சாப்பிடுவது உடல் நலத்துக்குக் கேடு எனக் குறிப்பிட்டிருந்தது.

இதன்படி, கோழி இறைச்சி தவிர்ந்த அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்களையும் மூட உள்ளூராட்சித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

## இராஜாங்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நீதியரசர்களான நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன்னிலையில் இன்று அழைக்கப்பட்டது.

இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கமும் இரண்டு சட்டத்தரணிகளும் அவருக்கு எதிராக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

## ரணில்-பஸில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு வந்த தன் பின்னர் ஜனாதிபதியைச் சந்திப்பது இதுவே முதல் தடவை என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருவருக்கும் இடையில் மாத்திரம் நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எதிரணியின் பகல் கனவு

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய வருடாந்த மாநாட்டில் மீண்டும் கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ரஞ்சித் மத்தும பண்டார அந்த வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது ஒரு புதுக் கணக்கை கண்டுபிடித்துத் தெரிவித்திருக்கிறார்

"அரசாங்கம் மக்கள் ஆணையை இழந்துள்ளது என்பது நாடாளுமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு 151 வாக்குகளையும், இடைக்கால ஜனாதிபதி தெரிவின்போது 134 வாக்குகளையும் அரசாங்கம் பெற்றுக் கொண்டது. ஆனால் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரசாங்கத்துக்கு வெறும் 123 வாக்குகளே கிடைத்துள்ளன. எனவே அரசாங்கத்துக்குள்ள பெரும்பான்மை பலத்தை இழப்பதற்கு இன்னும் 10 வாக்குகளே இல்லாது செய்யப்பட வேண்டும். எதிர்க்கட்சியில் உள்ள ஏனையக் கட்சிகளுடன் இணைந்து நாம் அவற்றை செய்வோம்."

– என்று கணக்குக் கூறியிருக்கின்றார் ரஞ்சித் மத்துமபண்டார.

ஆனால் அவர் ஒரு விடயத்தை மறந்து விட்டார். அரசாங்கத்துக்கு ஆதரவான வாக்குகளின் எண்ணிக்கையை அறுதிப் பெரும்பான்மையிலும் குறைவாக –அதாவது 112 அல்லது அதிலும் குறைந்த எண்ணிக்கைக்கு – கொண்டு வருவதன் மூலம் மட்டும் அரசை வீழ்த்தி விட முடியாது என்பதுதான் அது.

அத்தகைய சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு தராமல் வெளியில் நிற்கும் குறைந்த பட்ச 113 வாக்குகளையும் அரசுக்கு எதிரானவையாக திருப்பினால் மட்டுமே அரசை வீழ்த்த முடியும்.

அவர் குறிப்பிட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசுக்கு எதிரான வாக்குகள் சராசரியாக எண்பதற்கு மேலேறுவதாக இல்லை.

ஆக சுமார் எண்பது எம்பிக்களின் ஆதரவைக் கையில் வைத்துக் கொண்டு, இப்போதைய நாடாளுமன்ற கட்டமைப்புக்குள், அரசாங்கத்தைப் பதவியிலிருந்து வீழ்த்துவதோ, வீட்டுக்கு அனுப்புவதோ அல்லது மாற்றுஅரசை ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பதோ சாத்தியமானதாகத் தெரியவில்லை. அவை பகல் கனவு போன்ற தோற்றப்பாட்டைத்தான் தந்து நிற்கின்றன.

அரசுக்கு எதிரான நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரு தலைமையில் ஒன்று திரட்டி, அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை வலுப்படுத்தாத வரை, இத்தகைய கணக்குகள் வேலை செய்யப் போவதில்லை என்பது நிச்சயம்.

அதைச் செய்வதற்கான வசீகர அரசியல் தலைமை சஜித் பக்கத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை.

## மாற்று சிந்தனையோடு பயணித்த அமைப்புகளின் போராளிகள் நலன்புரிச் சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள்



### மூத்த போராளி ஈஸ்வரன் திட்டவட்டம்

மாற்று சிந்தனையோடு பயணித்த அமைப்புகளின் போராளிகள் நலன்புரிச் சங்கத்தில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த போராளி ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராளிகள் நலம்புரிச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களைப் பொறுத்தவரை தேசம் சார்ந்து தேசியத்தோடு பயணித்த போராட்ட அமைப்புகளின் போராளிகள் அதாவது விடுதலைக்காக பிற்பட்ட காலங்களிலே சில போராட்ட அமைப்புக்கள் எமது போராட்ட அமைப்போடு ஒரே கொள்கையில் இணைந்து பயணித்தவர்கள் இதில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

ஆனால் மாற்று சிந்தனையோடு பயணித்தவர்கள் யாரும் இந்த எமது அமைப்பில் இணைத்து பயணிக்கப் போவதில்லை.

நாங்கள் சிந்தித்து செயற்படுகின்ற விடயங்களைத் தொடர்ந்து பயணிக்காமல் முடியாமல் போய்விடும் எனவே மாற்று சிந்தனையுடையவர்களை இதில் உள்ளடக்க முடியாது என்பது எமது நிலைப்பாடாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பயிற்சிகளை வழங்கும் செயற் திட்டம்!

### வலிமேற்கில் நேற்று நடந்தது



போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பயிற்சிகளை வழங்கும் செயற்திட்டம் நடைபெற்றிருந்தது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழக்கம்பரையில் உள்ள வலி.மேற்கு பிரதேசசபையில் இந்த செயற்திட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வை ஹெல்திலங்கா மற்றும் சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி நிகழ்வில் ஹெல்தி லங்கா நிறுவனத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் பிரேமராஜா, சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர் மற்றும் இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அடுத்த வருடம் வறட்சி ஏற்பட மாட்டாதாம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

இந்த வருடம் மின்சார பாவனை 12 வீதம் குறைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இருப்பினும் அடுத்த வருடம் வறட்சி ஏற்படும் என இலங்கை மின்சார சபை கூறுவதில் உண்மை இல்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## தனது 19 வயதுடைய மகளைத் தாக்கி பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தை!

### கெக்கிராவையில் பொலிஸாரால் கைது

*உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த தனது 19 வயது மகளை கடுமையாகத் தாக்கி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 40 வயதுடைய தந்தை ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டார் எனக் கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.*

*பாதிக்கப்பட்ட மாணவி தனது தாய், தந்தை மற்றும் இரண்டு சகோதரர்களுடன் வீட்டில் வசித்து வருகிறார் எனவும் சுகவீனமுற்றிருந்த சகோதரர்கள் இருவருக்கும் வைத்திய சிகிச்சைக்காக தாய் வீட்டை விட்டு வெளியேறியபோது வீட்டில் இருந்த தந்தையே இவ்வாறு நடந்து கொண்டார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*தனக்கு தலைவலி ஏற்பட்டுள்ளதாகவும் தலைக்கு எண்ணெய் தடவு மாறும் தந்தை தனது அறைக்கு அழைத்து முகத்தில் முத்தமிட்டார் எனவும் இதனை விரும்பாத தான் தப்பிக்க முயற்சித்தபோது தன்மீது தாக்குதல் நடத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனவும் அந்த மாணவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.*

# ஜோர்ஜ் பிளாய்ட் கொலை வழக்கில் தீர்ப்பு: மற்றொரு பொலிஸ் அதிகாரிக்கும் சிறை!





அமெரிக்காவின் மினசோட்டா மாகாணம் மினியாபொலிஸ் நகரில் கடந்த 2020 ஆம்ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி ஜோர்ஜ் பிளாய்ட் என்ற கறுப்பினத்தைச் சேர்ந்தவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மடக்கி பிடித்தனர். அப்போது டெரெக் சாவின் என்ற பொலிஸ் அதிகாரி ஜோர்ஜ் பிளாய்ட்டை தரையில் தள்ளி அவரது கழுத்தில் கால் முட்டியை வைத்து பலமாக அழுத்தியதில் அவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் அமெரிக்காவில் அதிர்ச்சியை உருவாக்கியிருந்தது.

இதையடுத்து ஜோர்ஜ் பிளாய்ட்டின் மரணத்துக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் மாபெரும் போராட்டம் வெடித்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக டெரெக் சாவின் உள்பட 4 பொலிஸ் அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில் டெரெக் சாவின் மீதான கொலைக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்தது. இதனிடையே ஜோர்ஜ் பிளாய்ட் கொலை வழக்கில், அலெக்சாண்டர் குயெங் என்கிற மற்றொரு பொலிஸ் அதிகாரி கடந்த ஒக்டோபர் மாதம் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இந்த வழக்கில் நீதிபதி தனது தீர்ப்பை வழங்கினார். அந்தவகையில், ஜோர்ஜ் பிளாய்ட்டின் முதுகில் கால் முட்டியை வைத்து அழுத்தி அவரது கொலையில் பங்கு வகித்த

குற்றத்துக்காக அலெக்சாண்டருக்கு மூன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மினிபஸ்

## எண்மர் பலி; 17 பேர் பத்திரமாக மீட்பு







மணிலா, டிச.12

பிலிப்பைன்சில் மினிபஸ் ஒன்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட சம்பவத்தில் சிக்கி 8 பேர் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர். பிலிப்பைன்ஸ் நாட்டின் ரிசால் மாகாணம் டனாய் நகரில் இருந்து அங்குள்ள ஒரு கிராமத்துக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு மினிபஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. மினி பஸ்ஸில் 25 பயணிகள் இருந்தனர்.

இந்த மினிபஸ் அங்குள்ள ஒரு ஆற்றை கடந்து சென்று கொண்டிருந்தபோது ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் மினிபஸ் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு ஆற்றின் நடுவே சிக்கியது. இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸார் , தீயணைப்பு வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அவர்கள் ஆற்றின் நடுவே சிக்கிய மினிபஸ்சில் இருந்து பயணிகளை பத்திரமாக மீட்கும் முயற்சியில் இறங்கினர். எனினும் அதற்குள் 8 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர் என்றும் காயமடைந்த 17 பயணிகளும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# பாக். – ஆப்கான் எல்லையில் மோதல் 7 பேர் பலி; எல்லையில் பதற்ற நிலை





லாகூர், டிச.12

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் இடையே பல நூறு கிலோமீட்டர் தூரத்திற்கு எல்லை பரந்து விரிந்துள்ளமையால் இரு நாட்டு எல்லையிலும் அந்தந்த நாட்டு பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், ஆப்கானிஸ்தானின் காந்தகார் மாகாண எல்லையில் பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணம் ஈமென் மாவட்டம் அமைந்துள்ளது. இந்த மாவட்டத்தின் எல்லையில் லால் முகமது என்ற பகுதியில் எல்லைக்கட்டுப்பாட்டு பகுதி ப்உள்ளது. இங்கு இருநாட்டு பாதுகாப்பு படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எல்லை வழியாக இருநாடுகளுக்கும் இடையே சரக்குபோக்குவரத்தும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் ஈமென் மாவட்டத்தில் லாலா முகமது கிராமத்தில் உள்ள எல்லைப்பகுதியில் நேற்று ஆப்கானிஸ்தான் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். பீரங்கியால் குண்டு வீசியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பாகிஸ்தான் வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். இந்த பதில் தாக்குதலில்

ஆப்கானிஸ்தானில் ஒருவர் உயிரிழந்தார்.

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் எல்லையில் நடந்த மோதலில் மொத்தம் 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 29 பேர் படுகாயமடைந்தனர். பாகிஸ்தான் எல்லையில் இருந்து ஆப்கானிஸ்தானுக்குள் அத்துமீறி நுழைய முயன்றதால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் இடையே துப்பாக்கிச்சூடு, பீரங்கி தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் எல்லையில் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

# பெருவில் பொலிஸார் - பொதுமக்கள் மோதலில் இருபது பேர் வரைக் காயம்

## பதற்ற நிலைமை நீடிக்கின்றது




பெரு, டிச.12

பெரு நாட்டின் அதிபராக இருந்த பெட்ரோ காஸ்டிலோ கடந்த சில தினங்களுக்கு முன்னர் அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையைத் தொடர்ந்து துணை அதிபராக இருந்து வந்த டினா பொலுவார்டே என்ற பெண்மணி அதிபர் பதவி ஏற்றார்.

இந்த நிலையில், பெருவின் நகரமான அன்டாஹுய்லாசனில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது. இதில் 4 பொலிஸார் உட்பட 20 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோதலில் ஈடுப்பட்டவர்களை பொலிசார் கைது செய்தனர். போராட்டத்திற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

துணை அதிபர் பதவியேற்ற பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க அரசியல் சண்டை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்ததுடன், அப்போது அவர், நான் கேட்பது ஒரு இடம். நாட்டை மீட்பதற்கான நேரம் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், பெரு நாட்டின் பொலிஸ் துறையும், ஆயுதப்படைகளும் ஒரு கூட்டறிக்க வெளியிட்டிருந்தன. அந்த அறிக்கையில், அரசியல் அமைப்பின் ஒழுங்கை தாங்கள் மதிப்பதாக தெரிவித்திருந்தன. இந்த நிலையில், பெருநாட்டில் அடுத்தடுத்து நிகழும் திருப்பங்கள், பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# உலகத் தொழிநுட்ப சந்தையில் சீனாவை முந்தியது இந்திய நாடு



பீஜிங், டிச.12

சீனாவை சேர்ந்த தொழிநுட்ப வல்லுநர் மைக் லியு. இந்தியா மற்றும் சீனாவின் பல முன்னணி தொழிநுட்ப நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவமுடைய இவர், 'இந்திய தகவல் தொழில் நுட்பத்தின் எழுச்சி' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இவர் உலகளாவிய தொழிநுட்ப சந்தையில், சீனாவை விட இந்தியா முன்னிலையில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

உலகச் சந்தைகளில் இந்திய தொழிநுட்ப நிறுவனங்கள் ஆட்சி செய்வதாக கூறும் அவர், சீனாவின் தொழில்நுட்ப வருமானம் பெரும்பாலும் உள்நாட்டில் இருந்தே கிடைப்பதாகத் தெரிவிக்கிறார்.

அதாவது, சீனாவின் தகவல் தொழில்நுட்ப வருவாயில் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை உள்நாட்டு சீன சந்தையில் இருந்து வருகிறது, என்கிறார் மைக் லியு. சர்வதேச சந்தைகளில் கால் பதிக்க சீன தொழிநுட்ப நிறுவனங்கள் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

## புலி தாக்கியதில் கிராமவாசி ஒருவர் உயிரிழப்பு; சீற்றத்தில் மக்கள் அதிகாரிகள் மீது தாக்குதல்!



மத்திய பிரதேசத்தின் சியோனி மாவட்டத்தில் உள்ள பென்ச் புலிகள் காப்பகத்துக்கு அருகே உள்ள கோண்டே என்கிற கிராமத்துக்குள் நேற்றையதினம் புகுந்த புலி ஒன்று, அங்குள்ள குடியிருப்பு பகுதிக்கு சென்றதுடன், அங்கு தனது வீட்டின் பின்புறம் அமர்ந்து இளைப் பாறி கொண் டிருந்த சன்னிலால் படேல் என்கிற 55 வயது நபரை அடித்துக் கொன்றது.

சன்னிலாலின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு திரண்டனர். கூட்டத்தை பார்த்ததும் வயலுக்குள் சென்று மறைந்த புலி, திடீரென மக்கள் கூட்டத்தின் மீது பாய்ந்து தாக்கிவிட்டுத் தப்பி ஓடியது. இதில் 2 பேர் படுகாயம் அடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த கிராம மக் கள் வனத்துறை அதிகாரிகளின் அலட்சியத்தா லேயே இது நடந்ததாக கூறிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புலியைப் பார்த்தால் அடித்து கொல்வதற்காக அவர்கள் இரும்பு கம்பிகள், மரக்கட்டைகள் உள்ளிட் டவற்றை கையில் வைத்திருந்தனர். இதனிடையே இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் வனத்துறை அதி காரி கள் கோண்டே கிராமத்துக்கு விரைந்தனர். அப்போது அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் வனத்துறைஅதிகாரிகள்மீதுமரக்கட்டை களை வீசி எறிந்தனர். இதில் பென்ச் புலிகள் காப்பகத்தின் கால்நடை வைத்தியர் ஒருவர் படுகாயம் அடைந்தார் என்றும் வனத் துறை அதி காரிகளின் 6 வாகனங்கள் சூறையாடப்பட் டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



## இந்தியவம்சாவளியை சேர்ந்தவருக்கு சிங்கப்பூரில் 6 மாதங்கள் சிறை வாசம்

சிங்கப்பூர், டிச.12

சிங்கப்பூரில் முன்னாள் காதலியின் வருங்கால கணவர் வீட்டுக்குத் தீ வைத்தார் என்ன்அ குற்றச்சாட்டில் இந்திய வம்சா வளியை சேர்ந்தவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வசித்து வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுரேந்திரன் சுகுமாரன் என்பவர் சிங்கப்பூரை சேர்ந்த ஒரு பெண்ணை காதலித்து வந்தார்.

பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்துவிட்ட னர் என்று கூறப்படுகிறது. இந்த சூழலில் இன்ஸ்டாகிராம் பதிவு மூலமாக தனது முன்னாள் காதலிக்கு முகமது என்பவருடன் திரும ணம் நிச்சயிக்கப்பட்டதை சுரேந்திரன் அறிந்துள்ளார்.

இதனால் கோபமடைந்த சுரேந்திரன் தனது முன்னாள் காதலியின் வருங்கால கணவரின்

முகவரியை தேடிக் கண்டு பிடித்ததமையுடன், அவரது வீட்டுக்கு சென்ற சுரேந்திரன் வீட்டுக்குத் தீ வைத்துவிட்டுத் தப்பி ஓடினார். அப்போது வீட்டுக்குள் முகமதுஇருந்தார். எனினும் இந்த விபத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக சுரேந்திரன் மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றில், விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்கில் நேற்றுமுன்தினம்ப்இறுதி விசாரணை நடந்தது. இதில் சுரேந்திரன் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவரைக் குற்றவாளியாக அறிவித்த நீதிபதிஅவருக்கு 6 மாதங்கள் சிறை தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.



## குஜராத் முதலமைச்சராக மீண்டும் பதவியேற்கிறார் பூபேந்திர படேல்

புதுடெல்லி, டிச.12

இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்த குஜராத் சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 182 இடங்களில் இதுவரை இல்லாத வகையில், அந்தக் கட்சி 156 இடங்களில் வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடர்ந்து 7 ஆவது முறையாக அந்த மாநிலத்தை ஆளுகிற அதிகாரத்தை பா.ஜ.க.வுக்கு மக்கள் வழங்கி உள்ளனர்.

அங்கு முதலமைச்சராக இருந்து வந்த பூபேந்திர படேல்தான் மீண்டும் முதலமை ச்சர் பதவி ஏற்பார் என பா.ஜ.க. மேலிடம் அறிவித்தது. சட்டசபை தேர்தலில் அவர் காட்லோதியா தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆமீ யாஜ்னிக்கை 1 லட்சத்து 92 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாதனை வெற்றி பெற்றம்சி குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், புதிய முதலமைச்சர் பதவி ஏற்பு விழா, காந்திநகரில் அரசு புதிய தலைமைச் செயலகம் அருகே அமைந்துள்ள ஹெலிபேடு மைதானத்தில் இன்று திங்கட்கிழமை கோலாக லமாக நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்தன.

இன்று மதியம் 2 மணிக்கு நடக்கின்ற பதவி ஏற்பு விழாவில், பூபேந்திர படேலுக்கு கவர்னர் ஆச்சாரிய தேவ்ரத் பதவிப்பிரமாணமும், ரகசியக்காப்பு பிரமாணமும் செய்து வைக்கிறார். பூபேந்திர படேல், தொடர்ந்து 2 ஆவது முறை யாக குஜராத் மாநில முதலமைச்சராக பதவி ஏற்கிறார்.

அவர் மாநிலத்தின் 18 ஆவது முதலமைச்சர் ஆகிறார். பூபேந்திர படேலுடன் மந்திரிகள் சிலரும்

பதவி ஏற்பர் என காந்தி நகரில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

இந்த விழாவில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை மந்திரி அமித்ா மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். இதையொட்டி காந்தி நகரில் பலத்தபாதுகாப்புஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன என்று கூறப்டுகின்றது.

# தோப்பூர் பிரதேசத்தில் உயிரிழந்த 50 மாடுகளின் உடலங்கள் புதைப்பு



(எவ்.முபாரக்)

சீற்ற காலநிலையால் ஏற்பட்ட குளிர் காரணமாக தோப்பூர் பிரதேசத்தில் உயிரிழந்த சுமார் 50க்கும் மேற்பட்ட மாடுகளின் உடலங்கள் தோப்பூர் கரைச்சைப் பகுதியில் கடந்த் சனிக்கிழமை புதைக்கப்பட்டன.

மூதூர் பிரதேச மூலம் பெக்கோ இயந்திரம் பெற்று பள்ளம் தோண்டப்பட்டு அங்கு புதைக்கப்பட்டன.

கடந்த வாரம் அந்த இரண்டு நாள்களில் தோப்பூரில் சுமார் ஐம்க்கும் மேற்பட்ட மாடுகள் குளிரினால் உயிரிழந்துள்ளன. அத் தோடு சுமார் 05 மாடுகள் அளவில் தற்போது தோப்பூர் கரைச்சைப் பகுதியில் உயிருக்குப் போராடி வருவதையும் காண முடிந்தது.

மாட்டு உரிமையாளர்கள் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் –

தோப்பூர் பகுதியில் 50 க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளன. இதுவரையில் எந்தவித அதிகாரிகளும் வந்து பார்க்கவும் இல்லை.என்ன விடயம் என்று கேட்கவும் இல்லை. எமது மாடுகளுக்கு உணவுக்கான மேய்ச்சல் தரை இல்லை. இதனால் மாடுகள் நடுக்கத்தை தாங்கும் சக்தியில் இல்லை. இதனால்தான் மாடுகள் உயிரிழந்தன. மாடுகளுக்கு மேய்ச்சல் இருக்குமாக இருந்தால் சரியான உணவு கிடைத்து குளிரைத் தாங்கி திடகாத்திரமாக இருக்கும்.

எஞ்சிய மாடுகளை பாதுகாக்க வேண்டுமாக மேய்ச்சல் தரை ஒதுக்கப்பட வேண்டும் – என தோப்பூர் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வாழைச்சேனை மீனவர்கள் சென்ற படகு ஹம்பாந்தோட்டை ஆழ்கடலில் விபத்து!

## ஒருவர் மீட்பு; இருவரைக் காணவில்லை

(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மூன்று மீனவர்களுடன் மீன்பிடிக்கச் சென்ற இயந்திரப் படகு ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக வாழைச்சேனை துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மூன்று மீனவர்கள் ஹம்பாந்தோட்டை ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை பகுதியில் மீன்பிடித்து விட்டு வாழைச்சேனை துறைமுகம் நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்த படகு வெள்ளிக்கிழமை 9 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அன்றைய தினம் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக மீட்கப்பட்ட மீனவர் ஒருவர் வாழைச்சேனை துறைமுகத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

தாம் பயணித்த படகு கவிழ்ந்ததில் இரு மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் தெரியவில்லை என்றும் தன்னை ஹம்பாந்தோட்டை மீனவர்கள் காப்பாற்றி அவர்களின் படகில் தற்போது பராமரிப்பில் வைத்துள்ளனர் எனவும் மீட்கப்பட்ட மீனவர் நேற்றுத் தகவல் வழங்கியுள்ளார்.

இவ்விபத்தில் காணாமல் போன இரு மீனவர்களையும் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மீட்கப்பட்ட மீனவரை ஊருக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் துறைமுக அதிகாரி மேலும் தெரிவித்தார்.



# 1,000 தென்னை மர கன்றுகள் தம்பலகாமத்தில் விநியோகம்







(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிராஜ் நகர் 8ம் வாய்க்கால் பகுதியில் தென்னை மர கன்றுகள் வினியோகிகாகப் பட்டன.

பசுமைப் புரட்சி திட்டம் ஊடாக அகில இலங்கை வாலிபர் பேரவை ஏற்பாட்டிலும் சிடி கார்டின் அனுசரனையிலும் நேற்று இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஆயிரம் தென்னை மரக் கன்றுகள் பொது மக்களுக்காக விநியோகிக்கப்பட்டன.

இந்தநிகழ்வுக்குப் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து சிறப்பித்தார்.நூரானியா ஜும்ஆ பள்ளிவாயல் வளாகத்திலும் தென்னங் கன்றுகள் நடப்பட்டன.

இதன் போது போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு மற்றும் அதனை தடுத்து நிறுத்துவது தொடர்பில் பொது மக்களின் ஒத்துழைப்பு பற்றியும் தம்பலகாமம் பிரதேச பொலிஸ் நிலையப் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி என்.டி.சி.கௌசல்யா உரையாற்றினார்.

இதன் போது உரையாற்றிய பிரதேச செயலாளர் தம்பலகாமம் பகுதியை பொறுத்த மட்டில் சுமார் 9ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் காணப்படுகிறது. இத் தென்னங்கன்றுகளை நட்டு இதன் மூலம் தங்களை தாங்களே வீடுகளில் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் பயன் பெற வேண்டும். – என்றார்.

இதில் அகில இலங்கை வாலிபர் பேரவை மாவட்ட இணைப்பாளர் எம்.எம்.முக்தார், தம்பலகாமம் பிரதேச சபை உறுப்பினர் பரீதா உம்மா உட்பட ஊர் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மருதமுனையில் கடல் அரிப்பை தடுக்க தற்காலிக தடுப்புச் சுவர்

(ஏ.எல்.எம். ஷினாஸ்)

கடந்த வார இறுதியில் இரண்டு தினங்களாக வங்களா விரிகுடா கடல் பரப்பில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக நாட்டின் நாலா பக்கங்களிலும் கரையோர பிரதேசங்களில் கடலரிப்பு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

மருதமுனைக் கடற்கரையில் கடலரிப்பு காரணமாக பல தென்னை மரங்கள் முறிந்து நீருக்குள் விழுந்துள்ளன. இதேவேளை மருதமுனை பிரதேசத்தின் அடையாளமாக காணப்பட்ட 'லைட் ஹவுஸ்' கடல் அலையினால் சேதமடைந்து விழுந்து விடும் என்ற அபாயம் ஏற்பட்டது. இந்நிலையில் கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டன.

கரையோர பாதுகாப்பு திணைக்களம், கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை, சிவில் சமூகத்தினர், மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து கடலரிப்பை தடுப்பதற்கான மண் மூடைகளைக் கட்டி தற்காலிக தடுப்புச் சுவர்களை அமைத்தனர். இந்நிலையில் அங்கு வருகை தந்த கரையோரம் பேணல் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிரதம பொறியியலாளர் எம்.துளசிதாசன் முயற்சியினால் ஜியோ டெக்ஸ் காபட் விரிப்புகள் விரிக்கப்பட்டு கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு பிரதேச மக்கள் தமது நன்றிகளை தெரிவித்தனர். எதிர்காலத்தில் கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.



# சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் யாழில் மனித உரிமைகள் தினக் கலந்துரையாடல்!





(சாவகச்சேரி நிருபர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கியுடெக் கரித்தாஸ் வளாக மண்டபத்தில் சர்வதேச மனித உரிமைகள் தினக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

'அனைவருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி' எனும் கருப்பொருளில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 75 ஆவது வருட நிறைவை முன்னிட்ட விசேட உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி தூனி சயந்தன் ஆற்றியிருந்தார்.

நிகழ்வில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், சட்டத்தரணி றொபின்சா நக்கீரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார் சத்தியப்பிரியா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் க.றஜீவன், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி ஞா.கஜந்தா, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் செல்வி க.பிரதீபா மற்றும் சமூக செயற்பாட்டாளர் செபஸ்ரியாம்பிள்ளை யோசப்பாலா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மனித உரிமைகள் தின நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

# குருநகர் மீனவர்களின் 30 படகுகள் மண்டூஸ் சூறாவளி காரணமாக சேதம்

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் குருநகர் பகுதி மீனவர்களின் 30 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்துள்ளன என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மண்டூஸ் சூறாவளியின் தாக்கம் காரணமாக கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர்களின் படகு இவ்வாறு அலையால் அடித்து சேதமடைந்துள்ளது.

அத்துடன் ஒரு படகு முற்றாக கடலில் மூழ்கியுள்ளது. இதனால் மீனவர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முப்பதுக்கு மேற்பட்ட மீனவர்களின் படகுகள் இவ்வாறு சேதமடைந்துள்ளதுடன் அவர்கள் கடற்றொழிலுக்கு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் சேமடைந்த படகுகளை திருத்துவதற்கான பொருளாதார ரீதியாக தம்மிடம் வசதி இல்லை என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே அரசாங்கம் தங்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் விமான சேவை பரிசீலனை செய்கின்றது அரசு

சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆகக் குறைந்த செலவின் கீழ் விமான சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச விமான சேவைகள் தினம் மற்றும் இலங்கையின் விமான தொழிற்துறை ஆரம்பிக்கப்பட்டு 110 வருடங்கள் பூர்த்தியையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலளார்.

விமான சேவையானது தனவந்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட சேவையாக இருக்கக்கூடாது என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் பல்வேறு நாடுகளில் வருமானம் குறைந்த மக்களுக்கு குறைந்த செலவில் பயணிக்க கூடிய பாதுகாப்பான விமான சேவைகள் இருப்பதாகவும் எவ்வாறாயினும் எமது நாட்டில் அந்த சேவைகள் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால் இதனை பரீசிலித்து சாதாரண மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் விமான சேவைகளை வழங்க வேண்டும் என விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# இந்து கலாச்சாரத் திணைக்கள ஏற்பாட்டில் காரைதீவில் 4 நாள்கள் புத்தகக் கண்காட்சி











(வி.ரி. சகாதேவராஜா)

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் நூல் விற்பனையும் காரைதீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக ஆரம்பமானது. அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தில் இந்த புத்தக கண்காட் சியும் விற்பனையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை புத்தகக்கண்காட்சி அங்குரார்ப்பண வைபவம் இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், முன்னிலை அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மின் குருகுல உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்சிதானந்தாஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் அழைப்பு விடுத்திருந்த இந் நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், உதவி பிரதேச செயலாளர்களான பி.பார்த்தீபன்( காரைதீவு), ச.சதிசேகரன்( திருக்கோவில்), ரி.சுபாகரன்( ஆலையடிவேம்பு) மற்றும் வலயக்கல்வி பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக அதிதிகள் வரவேற்கப்பட்டு சுவாமிகளின் இல்லத்தில் விடே பூசை மற் றும் சுவாமியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அதிதிகள் புத்தக கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

சுவாமிகளின் அருங்காட்சியகம் மற்றும் அறிவகம் என்பவற்றையும் தரிசித்தனர். இறுதியில் விபுலானந்த மணி மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெற்றது. அங்கு வானொலி அறநெறிச்சார அறநெறி மாணவர்களுக்கு நூல் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன..

## இனிமேல் வீழ்ந்தாலும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டெழுவோம். – இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் தமிழ் மகா வித்தியாலயம், திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயம், மவுண்ட்வேர்ணன் தமிழ் மகா வித்தியாலயம், போகாவத்தை சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து புலமைப் பரிசிலில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குமான பரிசளிப்பு நிகழ்வும், போகாவத்தை மற்றும் ஸ்டோனிகிளிப் வட்டார கரப்பந்தாட்ட போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும், ஸ்டோனிகிளிப் வட்டார கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

கொட்டகலை ஸ்டோனிகிளிப் ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவரும், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.லெட்சுமண் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜீவன் தொண்டமான் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




